# DEPOSITION OF WITNESS
(Chapter XXII code of criminal procedure)
IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE
C.C.No. 543/2024
Deposition of Witness for L.W.12/ P.W.6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கார்த்தி | | | |
| Father's/ Husband's Name | : | தங்கவேல் | Occupation | : | கட்டிட வேலை |
| Village | : | சித்தோடு | | | |
| District | : | ஈரோடு | Age | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.07.2026**
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.
**எதிரி ஆஜரில் உள்ளார்.**

**முதல் விசாரணை:**

நான் நான் சித்தோட்டில் குடியிருந்து வருகிறேன். கட்டிட வேலை செய்து வருகிறேன். கடந்த 10.01.2021 ஆம் தேதி காலை 9 மணிக்கு நான் அசோகபுரம் இந்தியன் ஆயில் பெட்ரோல் பங்க் முன்புள்ள ரோட்டில் நடந்து சென்ற போது அங்கு நடந்த விபத்து சம்பந்தமாக கருங்கல்பாளையம் போலீசார் அங்கு வந்திருந்தார்கள். சம்பவ இடத்தை பார்வையிட போவதாகவும், என்னை சாட்சியாக இருக்கும் படியும் கேட்டார்கள். அப்போது போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து, பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் அ.த.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

விபத்துக்கு உண்டான வாகனத்தை ஓட்டி சென்ற முனியாண்டி எனக்குத் தெரிந்தவர் என்றால் சரிதான். இந்த வழக்கில் போலீசார் விசாரணை செய்து

கையொப்பம் பெற்றதாக தெரிவித்துள்ளேன். மேற்படி கையொப்பம் காவல் நிலையத்தில் வைத்து பெறப்பட்டது என்றால் சரிதான்

**மறுவிசாரணை: இல்லை.**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.

J.M. A.M.C.